# விண்ணப்பங்களுக்கான அழைப்பு

## துணை வேந்தர் பதவி - கம்பஹா விக்கிரமாரச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம், இலங்கை

1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 34(1)ஆம் பிரிவு மற்றும் அதன் பின் வந்த திருத்தங்களினாலும் 2023 ஏப்ரல் மாதம் 10ஆம் திகதிய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 03/2023ஆம் இலக்க சுற்றுநிருபத்தில் விதிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் கம்பஹா விக்கிரமாரச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகத்தின் நிர்வாக பேரவையினால் எதிர்வரும் மூன்று ஆண்டு காலத்திற்கு துணைவேந்தர் ஒருவரைத் தெரிவு செய்வதற்காக தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன.

1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்திற்கு அமைவாக, துணைவேந்தர் பல்கலைக்கழகத்தின் முழுநேர உத்தியோகத்தராவார். துணைவேந்தரே பல்கலைக்கழகத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி, முதன்மை கல்வி அதிகாரி மற்றும் கணக்கீட்டு அதிகாரியும் ஆவார். பல்கலைக்கழகப் பேரவை மற்றும் மூதவை என்பனவற்றின் பதவி வழி உறுப்பினரும், தலைவரும் ஆவார்.

1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் விதிமுறைகளின் பிரகாரம் துணைவேந்தர் பதவியிலிருந்து நீக்கப்பட்டால் அல்லது பதவியைக் கைவிட்டுச் சென்றால் தவிர மூன்று வருடங்களுக்கு அல்லது அவர் தனது அறுபத்து ஐந்து வயதைப் பூர்த்தி செய்யும் நாள், இவ்விரண்டில் எது முன்வருகிறதோ அதுவரை பதவி வகிப்பார்.

துணைவேந்தர், கல்வி நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துதல், முகாமைத்துவக் கொள்கைகளை உருவாக்குதல், அறிமுகப்படுத்துதல், நடைமுறைப்படுத்தல் ஆகியவற்றுக்கு பொறுப்பானவர் என்பதோடு பேரவை தீர்மானங்களை நடைமுறைப்படுத்தல், பல்கலைக்கழகத்தின் பொது நிர்வாகம் என்பவற்றுக்கு பொறுப்பானவராகவும், கல்வியின் உன்னதம், வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல், ஜனநாயக முகாமைத்துவம் மற்றும் சார்பு நிலையற்ற திறமிகு தலைமைத்துவம் ஆகியவற்றை நிலைநிறுத்தும் பொறுப்பும் துணைவேந்தருக்குரியது.

வெற்றிகரமான வேட்பாளர், வலுவான ஆராய்ச்சி சுயவிபரம் உட்பட உயர் கல்வி சாதனைகளின் பதிவை நிரூபிக்க வேண்டும், மேலும் நிரூபிக்கப்பட்ட தலைமைத்துவ குணங்களுடன் கூடிய மூலோபாய பார்வையைக் கொண்டிருக்க வேண்டும். பல்வேறு ஆர்வமுள்ள குழுக்களுடன் புறநிலையாக தொடர்பு கொள்ள வலுவான தனிப்பட்ட திறன்கள், கொள்கை கட்டமைப்புகள் பற்றிய தெளிவான புரிதல் மற்றும் முடிவுகளை திறம்பட செயற்படுத்துவதற்கான அர்ப்பணிப்பு ஆகியவற்றை அவன்/அவள் கொண்டிருக்க வேண்டும். மேலும், வேட்பாளர் பல்கலைக்கழகத்தின் நெறிமுறைகள் மற்றும் நோக்கம் பற்றிய ஆழமான புரிதலைக் கொண்டிருக்க வேண்டும், பல்கலைக்கழக சமூகம் மற்றும் சமூகத்திற்கு நிறுவன ரீதியாகவும் பரந்த அளவிலும் அர்ப்பணிப்பைக் காட்ட வேண்டும். (விண்ணப்பதாரர்கள் விவரங்களுக்கு பல்கலைக்கழகத்தின் இணையதளத்தைப் பார்வையிட அழைக்கப்படுகிறார்கள்: https://gwu.ac.lk/).

துணைவேந்தர், பல்கலைக்கழகத்தின் கல்வி பணியாட் தொகுதியின் சம்பள அளவில் மிக உயர்ந்த சம்பள அளவில் அமர்த்துவதற்கான தகைமையைப் பெறுவார் என்பதுடன் அடிப்படைச் சம்பளத்தில் 15% பொழுதுபோக்குக் கொடுப்பனவாகப் பெறுவதற்கும் பதவிக்குப் பொருந்தக்கூடிய பிற கொடுப்பனவுகளைப் பெறுவதற்கும் தகுதியுடையவர்.

விண்ணப்பதாரர் அனுப்பும் விண்ணப்பத்துடன் பின்வரும் ஆவணங்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

i. விண்ணப்பதாரரின் பிறந்த தினம் உட்பட முழுமையான சுய தரவுப் படிவம் ( விண்ணப்பதாரர் இலங்கைப் பிரஜையாகவிருக்க வேண்டும் என்பதுடன் விண்ணப்பம் கோரப்படும் இறுதி நாளில் 63 வயதிற்குக் குறைந்தவராகவிருத்தல் வேண்டும்.)

ii. விண்ணப்பதாரர் துணை வேந்தர் பதிவிக்கு தெரிவு செய்யப்பட்டால் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கும் விடயங்கள் தொடர்பான சுருக்க விபரம் மற்றும் பல்கலைக்கழக அபிவிருத்தி தொடர்பான நோக்கத்துடனான பிரகடனமொன்று.

iii. பல்கலைக்கழத்தின் தற்போதைய துணை வேந்தர், அல்லது இதற்கு முன் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் பதவியை வகித்த விண்ணப்பதாரரானால், அவரது முதலாவது பதவிக் காலத்தின்போது செய்த சாதனைகளை முன்னிலைப்படுத்தும் அறிக்கையொன்றை மேற்கூறிய (i) மற்றும் (ii) ஆவணங்களுக்குப் புறம்பாக வழங்குதல் வேண்டும்.

iv. அரச சேவையில், கூட்டுத்தாபனச் சேவையில், நியாயாதிக்க நிறுவன சேவையில் அல்லது உயர்கல்வி நிறுவனங்களில் சேவையாற்றும் வெளிவாரி விண்ணப்பதாரிகளானால் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் போது அவர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால் குறித்த விண்ணப்பதாரரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும் என்பதைக் குறிப்பிடும் தொழில் வழங்குநரின் கடிதமொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை பதிவாளர் / பேரவையின் செயலாளர், கம்பஹா விக்கிரமாரச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம், இலங்கை, கண்டி வீதி, யக்கல, இலங்கை எனும் முகவரிக்கு 2025 பெப்ரவரி மாதம் 20ஆம் திகதி பி.ப. 3.30 மணி அல்லது அதற்கு முன்னதான வேலை நாளில் பதிவுத் தபாலில் கிடைக்கச் செய்தல் வேண்டும் அல்லது பதிவாளர் அலுவலகத்திற்கு நேரில் கொண்டுவந்து ஒப்படைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''துணை வேந்தர் பதவி - GWUIM'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

இதற்குப் புறம்பாக மேற்கூறிய ஆவணங்களின் மென் பிரதியொன்றை PDF வடிவில் regoffice@gwu.ac.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு மேற்கூறிய திகதி மற்றும் நேரத்திற்கு முன் அனுப்ப வேண்டும்.

விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதி நாளுக்குப் பின் இரண்டு மாதங்களுக்குள் விசேட பேரவை சபைக் கூட்டம் கூட்டப்படும் என்பதுடன் மதிப்பீடு மற்றும் நேர்முகத் தேர்விற்காக விசேட சபைக் கூட்டத்திற்கு முன் விண்ணப்பதாரர் தனிப்பட்ட ரீதியில் அழைக்கப்படுவர். சகல விண்ணப்பதாரர்களும் குறைந்தபட்சம் பத்து (10) நிமிடங்களுக்கு ஆனால் பதினைந்து (15) நிமிடங்களுக்கு விஞ்சாத ஒரு சுருக்கமான விளக்கக்காட்சிக்காக (Presentation) சிறப்பு பேரவை கூட்டத்திற்கு முன் அழைக்கப்படுவார்கள், எந்தவொரு வேட்பாளரும் சிறப்பு பேரவை கூட்டத்திற்கு முன் தோன்ற முடியாத நிலையில், செயலாளருக்கு முன்னறிவிப்பொன்றைச் செய்வதன் பேரில் அவர் நிகழ்நிலை முறையின் (Virtual mode) மூலம் விளக்கக்காட்சியை வழங்க அனுமதிக்கப்படலாம்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் விடுக்கப்பட்ட 2023 ஏப்ரல் 10ஆம் திகதிய ஆணைக்குழுவின் 03/2023ஆம் இலக்க சுற்றுநிருபத்தில் காட்டப்பட்டுள்ளதன் பிரகாரம் துணை வேந்தர் தெரிவு மேற்கொள்ளப்படும். துணைவேந்தர் பதவிக்கு நியமிப்பதற்கான நடைமுறைகள் தொடர்பான மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து மேற்கூறிய ஆணைக்குழுவின் சுற்றுநிருபத்தைப் பார்வையிடவும்.

(https://www.ugc.ac.lk/index.php?option=com_content&view=article&id=2442%3Acommission-circular-no-032023-appointment-to-the-post-of-vicechancellor&catid=190%3Acirculars-published-in-2023-012023-and-above&Itemid=20&lang=en)

மேற்கூறிய இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

**பீ.ஏ.என். கிரிஷாந்த,**
**பதிவாளர் மற்றும் பேரவைச் சபையின் செயலாளர்,**
**கம்பஹா விக்கிரமாரச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம், இலங்கை,**
**கண்டி வீதி, யக்கல, இலங்கை.**
**2025-01-19.**